REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 114

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: ஐப்பசி 8உ சனி (24—10—53) ★ ★ ★ வெளியீடு: ஐப்பசி 9உ ஞாயிறு (25—10—53)

உரிமையைப் பறிக்க புதிய ஆயுதம்!

பம்பாய் உயர்நீதி மன்றத் தீர்ப்பு கண்டு சீற்றம்!

—(:)—

பிரசுரங்களைப் பறிமுதல் செய்ய உரிமை பெறும்வகையில் சட்டம் திருத்தப்படுமாம்!

—(0)—

இந்த வகையில் 1951-வது வருடத்திய திருத்தச் சட்டத்தை மேலும் நீடிக்க ஆசை

புது டில்லி, அக். 23—

இந்திய அரசியல் சட்டம், அடிப்படை உரிமை என்ற அட்டவணையில் உள்ள 19-வது பிரிவை ஒழித்துக்கட்டும் முறையில், 23—10—53-ல் 'ஆட்சேபிக்கத்தகுந்த விஷய சட்டம்,' என்ற ஒரு சட்டத்தை, இந்திய சர்க்கார் நிறைவேற்றி அமுல் நடத்தி வந்தது. அந்தச் சட்டம் 31—1—54-ந் தேதியோடு காலாவதியாகிறது. அதே சட்டத்தைத் திருத்தி, மேலும் அமுல் நடத்த இந்திய சர்க்கார் யோசித்துக்கொண்டு இருக்கிறது.

பொது மக்களின் எழுத்துரிமையையும், பத்திரிகைகளின் எழுத்துச் சுதந்திரத்தையும், அச்சுக்கூடத்தின் அச்சடிக்கும் உரிமையையும் கொலை செய்து வந்த அந்தச் சட்டத்தின் பிரிவுகளில் சில, இந்திய அரசியல்சட்டத்திற்கு முரண்பாடாக இருக்கின்றன என்று பம்பாய் உயர்நீதி மன்றம் இரண்டொரு வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளது.

எதிர்காலத்தில், இவ்வாறு சர்க்காரின் அடக்குமுறை போக்கு, உயர்நீதி மன்றங்களின் சட்ட தீர்ப்புகளால் முறியடிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே, மேலும் அந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைக்க இந்திய சர்க்கார் முனைந்து இருக்கிறது.

வெளியீடுகள் எதையாவது பறிமுதல் செய்வதற்கு சர்க்காருக்கு உரிமை அளித்துள்ள, அச்சட்டத்தின் 21-வது பிரிவு, அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாக இருக்கிறது என்று பம்பாய் உயர்

(3-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி சதி வழக்கு: விசாரிக்க தனி கோர்ட்!

திருநெல்வேலி, அக். 24—

இன்று திருநெல்வேலி சப்-மாஜிஸ்திரேட் ஆர். ரங்கையா நாயுடு, தூத்துக்குடி மேலூர் ஸ்டேஷனிலும், புதுக்கிராமத்திலும், அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக தொடரப்பட்ட கலவர வழக்கை, நவம்பர் 3-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

இந்த வழக்கில், 96 பேர் எதிரிகள்; இவர்களில் 63 பேர் ஜாமீனில் வெளிவந்துள்ளனர்; மீதமுள்ள 33 பேர் ரிமாண்டிலிருக்கிறார்கள்.

இந்த வழக்கை விசாரிக்க, தனி கோர்ட் ஏற்படுத்தப் படலாமெனத் தெரிகிறது.

தொழிலாளர்கள் துயர் நீங்க டில்லியின் அவசரச் சட்டம்

புது டெல்லி, அக். 23—

ஆள் குறைப்பு, தற்காலிக வேலை நிறுத்தம் ஆகியவைகளை குறித்து, இந்திய சர்க்கார், ஒரு அவசரச்சட்டம் பிறப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆமதாபாத் மில்களில் 'ஷிப்டு' நிறுத்தப்பட்டதின் விளைவுதான் இது என்றாலும், நாடு முழுதும் இது பயன்படும் எனத் தெரியவருகிறது.

ஆமதாபாத் தொழிலாளர்கள் நிலைபற்றி இன்று காலை வெளிநாட்டிலாகா அலுவலகத்தில் பிரதம மந்திரியின் அறையில் பூர்வாங்க உரையாடல்கள் நடைபெற்றன.

நிதி அமைச்சர் தேஷ்முக், கைத்தொழில் வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, தொழிலாளர் மந்திரி வி. வி. கிரி, தபால் மந்திரி ஜகஜீவன்ராம், திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா ஆகியோர் அந்த உரையாடல்களில் பங்கேற்றனர். இறுதி முடிவு நாளை வெளியாகும்.

ஜவுளி தொழில் அதிபர்கள் இந்திய அரசியலாரின் பிரதிநிதிகள் அடங்கிய முக்கூட்டு மாநாடு ஒன்றை பம்பாயில் நடத்த முடிவு கட்டியிருப்பதாகவும் தெரிகிறது.

மாமியார் கண்ணோட்டம்!

"காங்கிரசாருக்கும், தி. மு. கழகத்தினருக்கும் உணர்ச்சி பெருகிறது; ... படுகாயமுற்றது ... மக்கள்! இறுதில், மதுரைக்குக் கிடைத்த பரிசு என்ன? 144-வது செக்ஷன்; சாதாரண கூட்டங்களுக்கும் தடை."

—21-10-53 'தினத்தந்தி' சொல்லம்பு கட்டுரையில் எஸ். ஆர். கே.

தோழர் கிருஷ்ணசாமியை பொறுப்பாளர் கண்டார்

காங்கிரஸ் காலிகளால் தாக்கப்பட்டு படுகாயமுற்ற மதுரை மாவட்ட தி. மு. க பொருளாளர் தோழர் கிருஷ்ணசாமியை, பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, சந்தித்துப் பேசினார்.

நேரு, மதுரைக்கு வந்த சமயம், அமைதியான முறையில் கருப்புக் கொடி காட்டியதற்காகவும், ஆச்சாரியார் துவேஷப் பிரச்சாரத்தின் காரணமாகவும், காங்கிரஸ் காலிகள், கடையிலிருந்த தோழர் கிருஷ்ணசாமியை தலை தோள், முதுகு, கழுத்து, கை முதலிய பல இடங்களில் அரிவாளால் வெட்டி படுகாயப்படுத்தி விட்டனர்.

ஆஸ்பத்திரி நிர்வாகியின் திறமையால், தோழர் கிருஷ்ணசாமி உயிர் தப்பினார்.

சில காயங்கள் ஆறிவிட்டாலுங்கூட, கையில் பலமான காயமிருப்பதால், இன்னும் சில தினங்கள் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெறுவாரெனத் தெரிகிறது.

"காங்கிரஸ் காலிகள் பலாத்கார முறையில் தாக்கினார்கள் என்பதற்காக ஆத்திரப்பட வேண்டாம்; அமைதியாக இருங்கள்; இதுதான் அண்ணாவின் வேண்டுகோள்" என்று ஆறுதல் கூறினார்.

பொதுச்செயலாளர் அண்ணா, மற்ற தலைவர்களை சிறையில் கோவிந்தசாமி சந்தித்தார்

சென்னை, அக். 24—

சென்னை சிறையில், தோழர்கள் சி. என். அண்ணாதுரை, ஈ. வெ. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகிய தலைவர்களை, நானும், தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. சிற்றரசு, எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோரும் சந்தித்துப் பேசினோம்.

அண்ணாவும், மற்றத் தலைவர்களும் சுகமாகவும், உற்சாகமாகவும் காணப்பட்டனர்.

"தாங்கள் சிறையில் இருக்கின்ற சமயத்தில், நம் இயக்கத் தோழர்கள், பல தொல்லைகளுக்கும், கொடுமைகளுக்கும், தாக்குதலுக்கும் ஆளாகி வருகின்ற செய்தி அறிந்து வருந்துவதாயும், அதே சமயத்தில் நம் தோழர்களின் கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், அமைதி முதலியவைகளினின்றும் வழுவாமல் இருப்பதைக் கேட்டு மகிழ்வதாகவும்" கூறினர்.

மேலும், "சில காங்கிரஸ்காரர்கள், அமைதிக்குப் பங்கம் விளைவித்து, ஆத்திரமூட்டும் வகையில் பேசினாலும், தாக்கினாலும் பொறுமையை இழந்து விடாமல் அமைதியாக இருக்கும்படியும், தோழர்கள் கடமை உணர்ந்து பணியாற்றும்படியும்" கூறினர்.

—ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,

திருச்சி சிறையில் பொறுப்பாளர்

சென்னை, அக். 24—

திருச்சி சிறையில் தோழர்கள் கருணாநிதி, சக்தி, கஸ்தூரி ஆகிய தோழர்களை, பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள், சந்தித்துப் பேசினார்.

"தோழர் கருணாநிதியும் மற்ற தோழர்களும் உற்சாகமாகக் காணப்படுகிறார்கள்" என்று பொறுப்பாளர் கூறுகிறார்.

"பாகிஸ்தான், இந்தியாவுக்குத் தரவேண்டிய ரூ. 50 கோடி கடனை திருப்பித்தர இயலவில்லையென்று பாக். நிதி மந்திரி இந்திய நிதி மந்திரிக்கு எழுதியுள்ளதாக வந்துள்ள செய்திக்கு ஆதாரம் கிடையாது," என்று பாக். ஹை கமிஷனர் சஜ்ஜாபர் அலிகான் கூறியுள்ளார்.

எங்கும் நிறை 'பரபிரம்மம்!'



அமைச்சர் குழுவில் மேலும் மூன்று ஆச்சாரியார்!

[சங்கர்ஸ் வீக்லி'க்கு நன்றி]

ஐவர் சிறையில்!
இன்று
54—வது நாள்

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணுதுரை
சென்னை : 24-10-1953 சனி

வாய்தா வழக்கு மன்றம்!

ஐக்கிய நாடு மன்றம் தொடங்கி, நேற்ளேடு எட்டு ஆண்டுகள் முடிவுற்றன; இன்று, ஒன்பதாம் ஆண்டு தொடங்குகிறது. ஆண்டு கூடக் கூட, அந்த மன்றத்தில், சிக்கலும் கூடிக்கொண்டே போகிறது. ஆரம்பித்த கால முதல், அம்மன்றம் மேற்கொண்ட எந்தப் பிரச்னைகளுக்கும் இறுதியான முடிவு இதுவரை கண்டதில்லை. எல்லா சிக்கலும் 'தொடரும்' கட்டத்திலேயே இருக்கிறது!

மன்றத்தின், நோக்கம் விழுமியது. மன்றத்தின் உறுப்பினர்களோ மன்றத்தின் புனிதத்தைக் கறைபடுத்தி வருகின்றனர்.

இந்த மாசுபடுத்தும் பணியில் ஈடுபட்டிருப்பவர்களில் எவர் அறநெறி பூண்டவர், எவர் மறவினை புரிபவர் என்ற ஆராய்ச்சி வீண்வேலை. எல்லோருக்கும் இத்துறையில் பங்குண்டு. மன்றக் கோட்பாடுகளைக் குலைத்து வருவதில், உறுப்பினர்களிடையே உள்ள போட்டியோ உலகப் பிரசித்தம்.

போர் முடிந்து ஆண்டுகள் பல சென்றும், ஜெர்மன் பற்றிய விவகாரத்தில், எரிகின்ற வீட்டில் பிடுங்கினது ஆதாயம் என்ற எண்ணமே ஓங்கி இருக்கிறது. 'அத்திப் பழத்தைப் பிட்டால், அத்தனையும் சொத்தை' என்பதுபோல, ஜெர்மனிய பிரச்னை இருந்து வருகிறது.

தென் ஆப்பிரிக்காவில், மனித குலத்துக்கு எதிராக மலான் புரிந்துவரும் அக்கிரமச் செயல்களுக்கு இன்னமும் முற்றுப்புள்ளி வைக்கப்படக் காணேம். மன்றத்தினிடம், அவருக்கு அன்பும் பிறக்கவில்லை. அதன் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடப்போம் என்ற நல்ல புத்தியும் ஏற்படவில்லை. அங்கு இந்தியருக்கு இழைக்கப்படும் இடுக்கண்களுக்கெல்லாம் 'உள்நாட்டு விவகாரம்' என்று முடிபோட்டு, மன்றத்தின் உரிமைக்கு வரம்பு கட்டப் பார்க்கிறார் மலான் துரை.

இந்தியாவுக்குப் பரிந்து பேசுகிறவர்களுக்கோ இருதய சுத்தம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்திய சிக்கலைக் காட்டி சொந்தத்திற்கு சலுகை தேடும் வியாபார புத்தியே அவர்களிடம் காணக் கிடக்கிறது.

காஷ்மீர் சிக்கலோ களம் காணவில்லையே ஒழிய, பேச்சு வெறி களத்துக்கு குறைவாமல் இல்லை. நட்பு முறையில் கலந்து பேசி சிக்கலுக்கு முடிவு காண வேண்டும் என்று, பாகிஸ்தான் சார்பிலும் இந்தியாவின் சார்பிலும், எழும்பும் உபசார வார்த்தைகளுக்கோ பஞ்சமில்லை. செயலிலோ ஏதும் மூட்டுவதில்லை.

பரி நரியான கதை போல, முன்னுள் சீனத் தலைவன் சியாங்-கே-ஷேக்கின் முக்காடு அகற்றப்பட்ட பின்னரும் கூட, அவனை மன்றத்தின் உறுப்பினருகக் கொண்டிருக்க வேண்டும் என்று அமெரிக்கா பிடிவாதமாக பேசுவது, அமெரிக்காவின் சுயநலத்துக்கோர் படப்பிடிப்பு. பிணம் என்று தெரிந்தும் மன்றத்தின் பீடத்தில் அவனை உட்கார வைத்துக் கொண்டு இருப்பது, அமெரிக்கா, மன்றத்துக்கு இழைக்கும் மாபாதகமாகும்.

சீன மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள மா-சே-துங், மன்றத்தில் அங்கமாக இருந்தாக வேண்டும்; இதை அமெரிக்கா விரும்பவில்லையானாலும், இங்கிலாந்து விரும்புகிறது. நவசீனம், நுழையக் கூடாது என்று அமெரிக்கா கூறுவதற்கும், நுழையலாம் என்று இங்கிலாந்து வாதிடுவதற்கும் உள்ள ஒரே ஒரு காரணம், இரண்டு நாடுகளுக்கும் உள்ள சொந்த இலாப நஷ்டம் தான்! உலகப் பொது விதியோ, மன்றத்தின் கோட்பாட்டையோ மதித்து நடக்க வேண்டும் என்ற பெருவழி இரண்டு அரசுகளுக்கும் புறம்பானதாக இருக்கிறது.

இந்த இனத்தில், பிரான்ஸ் நாட்டின் கருத்தை நாம் பொருட்படுத்தத் தேவை இல்லை. இன்று பிரான்ஸ் வெறும் வெள்ளாட்டி நிலை. அமெரிக்காவின் பாதத்தை வணங்குவதும், இங்கிலாந்திற்கு வெண்சாமரம் வீசுவதும் தான் அதன் நடைமுறை வெளிநாட்டுக் கொள்கையாகப் போய்விட்டது.

வரலாறு எடுத்துக் காட்டும் பாடத்தையும் பிரான்ஸ் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை; தனது சிதைந்த வாழ்வை எண்ணிப் பார்த்ததாகவும் தெரியவில்லை. கிழக்கு நாட்டின் கொடுமை புரிவதை, பிரான்ஸ் கைவிட மறுக்கிறது.

தனது காலனியாக இருந்துவந்த மொராக்காவை இன்னமும் ஆட்டிப் படைப்பதிலேயே ஆசை வைத்துக் கொண்டிருக்கிறது, பிரான்ஸ். டியூனிசியா மக்களின் உரிமைக் குரலும் அதன் உள்ளத்தில் எரிச்சலை மூட்டுகிறது. இப்பிரச்னைகளும் ஐக்கிய நாடு மன்றத்துக்குள் இப்பொழுது தான் நுழைந்திருக்கிறது. 'சொந்த விவகாரம்' என்று சவால் செய்கிறது, மன்றத்தில், பிரான்ஸ்.

ஆட்சி முறை மாறிற்றேயல்லாது மக்கள் நிலை மாறவில்லையே!

கோனாட்சி போய் குடியாட்சி வந்துவிட்டதால் உலக நிலை உயரக் காணுேமே!

வினோபா பாவேயின் உள்ளத் துடிப்பு!

மாங்கீர், அக். 22—

கோனாட்சியும், குடிமக்கள் ஆட்சியும் தரத்தில் அதிகமான மாறுபாடு கொண்டதாக இருக்கவில்லை. மன்னர்கள் ஆண்ட காலத்தில், நாட்டுடையவும் மாநிலங்களுடையவும் தலையெழுத்து, சிறுசிறு போர்க்களங்களில் நிச்சயிக்கப்பட்டு வந்தன.

இதற்கு எடுத்துக்காட்டுகளாக பிளாசி போரும்பக்சர் சண்டையும் உள்ளன. மன்னர்கள் நுழைந்தனர்; வெளியேறினர்; ஆனால் மக்களின் சமூக இயல், பொருளியல் கட்டுக்கோப்புகளில் பெருமாறுதல் உண்டாகவில்லை.

இன்று ஒரு அரசனுக்கும், மறுநாள் வேறு ஒரு அரசனுக்கும் அவர்கள் வரி செலுத்தி வந்தனர்.

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, ஆட்சி முறையில் மாறுதல் காணவேண்டிய இன்றியமையாமை நினைப்பு எழுந்தது. எனவே, போர்க்களத்திற்கு பதில் வாக்களிப்பு முறை இடம் பெற்றது. இது பெற்றெடுத்துள்ளதோ, பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் என்ற குழப்ப நிலை.

இதன் பலனுக, மக்களாட்சி (போகசாதா) என்ற பெயரினுல், பெரும்பான்மை (பாகுசாதா) யோர் நடைமுறைக்கு வந்துள்ளது.

மக்களாட்சி முறை என்று சொல்லப்படும் இதற்கான இறுதி அனுமதியோ பலாத்காரமாகும். நூற்றுக்கு நாற்பத்தொன்பது நபர்களை ஐம்பத்தியோரு நபர்கள் ஆளும் முறை, முடிவாக உலகத்தையே பிளவாக்கி விட்டது. பலாத்காரத்தையும் நூறுமடங்குக்குப் பெருக்கிவிட்டது.

"அதிகாரத்தை கிராம மட்டம் வரை பிரித்துக் கொடுத்தால், கட்சி சார்பில்லாத உலக சர்க்காரைக் கூட அமைக்க முடியும்," என்று ஆச்சாரியா வினோபா பாவே, நேற்று மாலை இங்கு நடைபெற்ற வழிபாட்டுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்காதவரை, உண்மையான ஜனநாயகம் கனவாகவே இருக்கும். தற்போதைய ஜனநாயக அமைப்பில், புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தால்தான், அச்சம் ஒழியும்; அமைதி நிலவும். நிலம், செல்வம் மட்டுமன்றி, திறமை, சக்தி, அதிகாரம் ஆகியவற்றையும் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

"திட்டக் கமிஷனின், செலவுமிக்க திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏன் இன்னும் அதிகமாக தலைவிரித்தாடுகிறது? பீஹாரின் 4 கோடி மக்களின் கதியானது, பாராட்டப்படும் இருதலைவர்களின் கையில் ஏன் சிக்கித் தவிக்க வேண்டும்? சோஷலிஸ்டுகள் என்ன பரிகார யோசனைகளைத் தரக் காத்திருக்கிறார்கள்? அவர்களும், மற்றொரு ஐந்தாண்டுக்கு மேலும் ஒரு பரிசோதனை நடத்துவதைத் தவிர்த்து, வேறு ஏதும் செய்யப் போவதில்லை. இப்படியே, வரம்பில்லாது, கோடானு கோடி மக்களின் வாழ்க்கையை நாம் பூப்பந்தாடிக் கொண்டிருக்க முடியுமா?"

"கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி அவைகளிடம் அதிகாரத்தைப் பிரித்துக் கொடுப்பதே சரியான வழி."

"அத்தகைய பஞ்சாயத்துக்கள், கட்சி முத்திரைகள் ஏதுமின்றி இயங்கி, மாநிலங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு மாநிலப் பிரதிநிதிகள் முழு நாட்டையும் நிர்வகிக்க நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இறுதியாக உலக சர்க்காருக்காக ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகளும் தங்களுக்குள் சிலரைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும்," என்று குறிப்பிட்டார்.

தாராசிங் முடிவை மாற்றிக் கொண்டார் என்றது பொய்!

— (:) —

நிருபர்களின் பித்தலாட்டம் அம்பலமாகிறது

நியூடெல்லி, அக். 23—

டெல்லியில் பிரதமர் நேரு மாளிகையின் முன்பாக அடுத்தத் திங்கள் முதல் தேதி முதல் அகாலிடால் தலைவர் மாஸ்டர் தாராசிங் உண்ணு நோன்பு இருக்க முடிவுசெய்து இருந்தார். அதற்காக, ஒரு சிறு குழுவுடன் டெல்லி நோக்கியும் கால்நடையாகப் புறப்பட்டு விட்டார்.

இந்து மகா சபைத் தலைவர் சாட்டர்ஜி, முயற்சியைக் கைவிட வேண்டும் என்று தாராசிங்கைக் கேட்டுக் கொண்டார். அதற்கு இணங்க தாராசிங் மறுத்துவிட்டார்.

ஆனுல், பத்திரிகை நிருபர்கள், இந்து மகா சபைத் தலைவர் கோரிக்கைக்கு இணங்க, தாராசிங் உண்ணு நோன்பு முயற்சியைக் கைவிட்டு விட்டதாக, பாராளுமன்ற உறுப்பினர் சர்தார் உகம் சிங் பொதுக் கூட்டம் ஒன்றில் அறிவித்தார் என்ற பித்தலாட்டச் செய்தியைப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டனர்.

இப்பொழுது, தாம் அப்படி ஒன்றும் கூறவே இல்லை என்று, அந்தப் பொய்ச் செய்தியை மறுத்து விட்டிருக்கிறார்.

கொரியப் போராட்டம் ஒரு கேலிக் கூத்து. அமெரிக்கா—சீனு—ரஷ்யா ஆகிய வல்லரசுகளின் பலப் பரீட்சைக் களமாகக் கொரியா மாற்றப்பட்டுவிட்டது. கொரிய இணைப்பு என்ற பெயரில் கொரிய மக்களை, ஒருவரை ஒருவர் வெட்டிப் படிய வெளியரசுகள் ஊக்கம் கொடுத்தது எந்த நியாயத்துக்கும் ஒத்துவராது. ஏதோ ஒரு வகையில் அமைதி அங்கே இப்பொழுது இருக்கிறது. இது நீடிக்காது என்ற துக்கச் செய்தியே தரப்படுகிறது.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி,' என்பதுபோல, டிரீஸ்டி குழப்பத்தை, இங்கிலாந்தும், அமெரிக்காவும் கிளப்பி விட்டிருக்கின்றன. இத்தாலிக்கு எதிராக யூகோவும், யூகோவுக்கு எதிராக இத்தாலியும் பரணி பாடத் தொடங்கி இருக்கின்றன. சும்மா ஆடுமா, சோழியன் குடுமி? இதைக் காட்டி, எது எதையோ, அமெரிக்காவும், இங்கிலாந்தும் சாதிக்க எண்ணிக்கொண்டு இருக்கின்றன.

இன்னும் எத்தனையோ உண்டு ஐக்கிய நாடு பற்றி குறைபட. ஆதிக்க வேட்டை ஆடுகிறார்கள் என்று அமெரிக்காமீது, சோவியத் ரஷ்யா குற்றஞ் சாட்டுகிறது. அதே குற்றத்தை ரஷ்யா செய்வதாக அமெரிக்கா குறைபடுகிறது. இது பற்றிய ஆராய்ச்சி இப்பொழுது தேவை இல்லை.

ஐக்கிய நாடு மன்றம் எட்டு ஆண்டுகளாக சாதித்துள்ள காரியங்களின் பட்டியல் இதுதான். ஒன்பதாம் ஆண்டில், மன்றத்தின் நடைமுறை வேறுக இருக்கும் என்று எப்படி நம்புவது? நம்பிக்கைக் கொள்ள எந்தவித முகாந்திரமும் இல்லை.

பெரும்பாலான உலகப் பிரச்னைகள் மன்றத்தில் பேசப்படுகிறது. 'நீ ஆதிக்க வெறியன்' என்ற சொல்தான், எல்லாப் பிரச்னைகளிலும், ஒவ்வொரு சமயத்திலும், ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதியின் மேலும் வீசப்படுகிறது. முடிவு, எந்தப் பிரச்னையிலும் தீர்ப்பு தராமல், மன்றம், நடைமுறையைத், தவணை குறித்துத் தள்ளிவைக்கிறது. எனவே, இதை, வாய்தா வழக்கு மன்றம் என்று கூறுவதே பொருத்தமாறு உள்ளது என்று நாம் கருதுகிறோம்!

குமாரகுப்பம்—வளவனூரில் பொதுக்கூட்டம்

27—10—53, செவ்வாயன்று மாலை குமாரகுப்பம்—வளவனூரில் தோழர் ஏ. கிருட்டிணசாமி தலைமையில், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

★

திருவண்ணுமலையில் தோழர் ஏ. கோவிந்தசாமி

25—10—'53 ஞாயிறன்று தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் தம்பியின் திருமணத்தில் கலந்துகொண்டுவிட்டு, அன்றைய தினம் திருவண்ணுமலையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பேசுவார்.

ஒன்பதாம் ஆண்டிலாவது ஐ. நா. சபையின் லட்சியம் வெற்றியுறுமா?

புதுடெல்லி, அக். 24—

இன்று, ஐக்கிய நாடுகள் ஸ்தாபன தினமாகும்; எட்டு ஆண்டுகட்குமுன், இந்த உலக ஸ்தாபனம் எந்த லட்சியங்களை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டதோ, அந்த லட்சியங்களில் தனக்குள்ள நம்பிக்கையை, இந்தியா, மீண்டும் வலியுறுத்துகிறது

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமானது அதன் சாசனத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் உன்னத கோட்பாடுகளிலிருந்து அடிக்கடி விலகிச்சென்று விட்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள்; அதிலும், முக்கியமாக, சென்ற 12 மாதங்களில், அது நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள், இந்தியாவிலும், பிற இடங்களிலும் ஆசாபங்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆனால், இந்தியா, ஐ. நா.விலிருந்து விலகிவிட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்ட யோசனைக்கு சமீபத்தில் பிரதம மந்திரி பின்வருமாறு பதில் கூறினர்:—

"ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமானது எத்தனையோ குறைபாடுகள் உடையதாக இருப்பினும் —அவை அதிகந்தான்—அது ஒரு மகத்தான உலக ஸ்தாபனமேயாகும். அதில் நம்பிக்கையும் சமாதானமும் உற்பவிக்கக்கூடிய 'கரு' அடங்கியிருக்கிறது; அதன் அமைப்பு, தன் முழுத் திருப்திக்கும் ஏற்ற வகையில் இல்லையென்ற காரணத்துக்காக, எந்த நாடாவது, அந்த அமைப்பை அழித்துவிடக் கருதுமானல், அப்போக்கு, மிகவும் துரதிருஷ்டவசமானதும், குயுக்தியானதுமான போக்காகும். அது ஒருபுறமிருக்க, அப்படி ஒரு நாடு செய்யுமானல், அதன் மூலம் அந்த ஸ்தாபனம் அடைகிற பாதகத்தைவிட அந்த நாட்டுக்குத்தான் அதிக பாதகம் ஏற்படுமென்பதில் எனக்கு சந்தேகமேயில்லை."

பாபு ராஜேந்திர பிரசாத், சென்ற ஆண்டில், பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

"மனித சமுதாயம் தொடர்ந்து வாழ வேண்டுமானல், இந்த லட்சியங்களை (ஐ நா. லட்சியங்களை) நிறைவேற்றுவதற்கு, இதற்குமுன் எப்போதுமிருந்ததைவிட இப்போது அதிக அவசியம் ஏற்பட்டிருக்கிறது."

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமானது. அதன் அங்கத்தினர்கள் அதை என்ன ஸ்திதியில் வைக்கிறார்களோ அப்படித்தானிருக்குமென்பது உணரப்பட்டிருக்கிறது.

தற்போது சர்வதேச ரீதியில் நிலவிவரும் நெருக்கடிகளும், அல்லல்களும், அந்த ஸ்தாபனத்தின் ஒவ்வோர் அங்கத்தையும் பாதித்துத்தான் இருக்கின்றன.

(இ. ச. வி.)

ஐதராபாத் காங்கிரசின் இருட்டறை நாடகம்!

கோட்டைக்குள் நடைபெற்ற குத்தும் வெட்டும் ஓய்ந்த மர்மம்?

புது டெல்லி, அக். 23—

ஐதராபாத் சட்ட சபைக் கட்சியிலும், பிரதேச காங்கிரஸ் கமிட்டியிலுமுள்ள காங்கிரஸ்காரர்கள், இனி குழப்பங்களுக்கும், தகராறுகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, விசுவாசமாக மந்திரி சபையுடன் ஒத்துழைக்குமாறு, காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு வேண்டிக் கேட்டுக்கொண்டுள்ளது.

சட்ட சபைக் கட்சி மந்திரிகள் மீது சுமத்திய குற்றங்கள் ஆதாரமற்றவைகள் என போர்டு முடிவு செய்தது. போர்டின் முடிவை சட்ட சபைக் கட்சியினர் ஒப்புக்கொண்டதாகவே சொல்லப்படுகிறது.

தாம், திருப்தியுடன் ஐதராபாத் திரும்புவதாக முதலமைச்சர் ராமகிருஷ்ண ராவ் நிருபர்களிடம் கூறினர்.

பிரதேச காங்கிரஸ் தலைவர் ராமானந்த தீர்த்தரும் தலைமையின் முடிவை ஒப்புக்கொண்டார்.

தலைவர் பிரசாத் வாழ்த்துச் செய்தி

புதுடில்லி, அக். 24—

"யுத்தங்கள் மனிதரின் மனதிலேயே பிறக்கின்றன; அதுபோலவேதான், தேசங்களுக்கிடையில் நல்லெண்ணமும், நேசசுபாவமும், சகிப்புத்தன்மையும், நல்லுணர்வும் உதயமாகின்றன. இந்த நல்லெண்ணத்தையும், நல்லுணர்வையும் அபிவிருத்தி செய்வதற்கு, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், அதன் பல்வேறு உறுப்புக்களும் முக்கியமான வகையிலும், தீர்மானமான முறையிலும் பணியாற்ற முடியும்,"

—இவ்வாறு, தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், ஐக்கிய நாடுகள் ஸ்தாபன தினம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு, அகில இந்திய ரேடியோ மூலம் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது:-

"ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் எட்டாவது பிறந்த நாள் விழாவை, உலகத்திலுள்ள சமாதான ஆர்வமுள்ள மக்களுடன் சேர்ந்து இந்தியாவும் கொண்டாடுகிறது. எதிர்காலத்தில் யுத்தங்களைத் தவிர்ப்பதற்கு ஏற்ற ஒரு சாதனத்தை அது ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் சாதனம், பழுதற்றது என்று யாரும் கூறவில்லை; ஆனால், யுத்தங்கள் தோன்றுவதற்குக் காரணமாயுள்ள விஷயங்களில், உலக மக்களின் சிந்தனை படியும்படி செய்வதற்கு அது நிச்சயமாய் வழி செய்திருக்கிறது; அதன் மூலம், அவைகளை ஒழிப்பதற்கு வழி செய்திருக்கிறது."

"இக்காரணங்கள் பிரதானமாக, வறுமையும், பொருளாதார தாரதம்மியமும், ஒரு பகுதி மக்கள் மற்றொரு பகுதி மக்களை சுரண்டி வாழ்வதும், ஒருவரை யொருவர் உணர்ந்து கொள்ளாமையும், சகிப்பின்மையுமே ஆகும்.

"இந்தக் காரணங்களை ஒழிப்பதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அமைத்துத் தந்துள்ள வழிகளில், பொருளாதார சமூகக் கௌன்சில், தர்மகர்த்தா சபை, மனித உரிமை சாசனம் ஆகியவை ஒரு சில ஆகும். உலகத்தின் முன்னுள்ள சர்வதேச பிரச்னைகள், விஷயங்கள் ஆகியவைகளில் பெரும்பாலானவற்றையும் விவாதிப்பதற்கு பொது சபையே ஒரு விவாத அரங்கமாக அமைந்திருக்கிறது.

"ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், அதன் நோக்கங்களைப் பூரணமாக நிறைவேற்றி வைத்துவிட்டது என்று யாரும் சொல்வதற்கில்லை. நாமே கூட, அது பல்வேறு துறைகளிலும், எடுத்துவந்துள்ள நடவடிக்கைகளின் காரணமாய் ஏமாற்றமடைந்திருக்கிறோம்; முக்கியமாக அது நடவடிக்கையெடுக்கத் தவறியிருப்பதால் ஏமாற்றமடைந்திருக்கிறோம்.

ஆனால், அது உலகம் இன்றுள்ள நிலைமையை எடுத்துக்காட்டும் அறிகுறியே தவிர, அந்த ஸ்தாபனத்திலுள்ள ஒரு கோளாறல்ல அதன் குறைபாடுகளைப் பொருட்படுத்தாமல், அந்த ஸ்தாபனத்தை பலப்படுத்துவது நம் கடமையாகும்: அதன்மூலம், கூட்டுறவும் சமாதானமும் ஏற்படுவதற்காக அது நீடித்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

"சமாதானம் நிலைக்க வேண்டுமென்பதில் நம் நாட்டைவிட, வேறு எந்த நாட்டுக்கும் அதிக அவசியம் கிடையாது. நாம், நமக்குச் சுதந்திரம் கிடைத்ததைத் தொடர்ந்து திரண்டெழுந்த சக்திகளை ஒருமுகமாய் இணைத்து, உருப்படியாய் திட்டம் வகுப்பதன் மூலமும், தைரியம் நிறைந்த புதிய உலகமொன்றை நிர்மாணிக்க முயன்று வருகிறோம்.

"உலகத்தின் முன்னுள்ள பிரச்னைகளை தீர்த்து வைப்பதில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கு இதற்குமுன் இல்லாத அளவுக்கு அதிக பலமும், அதிக வெற்றியும் கிடைக்க வேண்டுமென்றும், அதன்மூலம் மனித சமுதாயத்துக்கு நிரந்தர மகிழ்வு ஏற்பட வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்."

வாழ்விழந்து விதவைக் கோலத்தில் கண்ணீர் வடிப்பவர் ஒன்றரை லட்சம் சிறுமிகள்!

பாலிய மணத்தின் 'பயங்கரப் பரிசு!'

புது டெல்லி, அக் 23—

குழந்தை விவாகத்தைத் தடுக்கும் சாரதா சட்டம் அமுலில் இருந்தும், 5 முதல் 14 வயது வரை உள்ளவர்களில், 14.5 சதவிகிதம் பெண்களுக்கும், 6.8 ஆண்களுக்கும் விவாகமாகியிருப்பதாக 1951-ம் ஆண்டு சென்சஸ் கணக்கிலிருந்து தெரிகிறது.

இந்த வயதுக்குள் உள்ளவர்களில் 1,33,828 பெண்கள் விதவைகள் என்றும், 66,038 ஆண்கள் மனைவியை இழந்தவர்களென்றும், மொத்த மக்கள்பெருக்கத்தில் 8 81,47,296 ஆண்களும், 6,59,50 673 பெண்களும் திருமணமாகாதிருக்கின்றனரென்றும் தெரிகிறது.

நகரப் பகுதிகளைவிட, கிராமப் பகுதிகளிலேயே இக்கொடுமை அதிகமென சொல்லப்படுகிறது.

தென்இந்தியாவில் (சென்னை—மைசூர்—தி-கொ—குடகு) பெண்களில் 43 சதவிகிதமும், 1.1 சதவிகிதம் ஆண்களும் மணமானவர்கள்

அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில்...

புதுடில்லி, அக். 23—

அடுத்த மாதம் 16ம் தேதி துவங்கும் பாராளுமன்றக் கூட்டத்திற்கான சர்க்கார் மசோதாக்கள் பற்றிய நிகழ்ச்சி நிரலில் பிரத்தியேகமாக திருமண மசோதா, இந்து விவாக மசோதா, விவாகரத்து மசோதா, இந்தியன் கார்டியன் ஷிப் மசோதா ஆகியவைகள் இடம் பெற்றுள்ளன. மற்றும் பல மசோதாக்களும் எடுத்துக்கொள்ளப் படுமெனத் தெரிகிறது.

சென்னையில் காங்கிரசார் மீது வழக்கு

சென்னை, அக். 24—

சூளை தேசிய வாலிபர் சங்கத்தினருக்கும், தி. மு. கழகத்தினருக்கும் இடையே நடைபெற்ற தகராறு சம்பந்தப்பட்ட வழக்கு நேற்று, சென்னை 7-வது மாகாண மாஜிஸ்திரேட்முன் விசாரணைக்கு வந்தது. அதுபோது, தி. மு. கழகத்தினர் மீது கூறப்பட்ட குற்றப் பத்திரிகையில், தி. மு. கழகத் தோழர்கள், தேசிய வாலிபர் சங்கத்திற்குச் சென்று, அங்குள்ள பொருள்களுக்குச் சேதம் விளைவித்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது

காங்கிரசார் மீது தொடரப்பட்ட வழக்கில், சூளை தி. மு. கழகக் காரியாலயத்திற்குள் புகுந்து, அங்கிருந்தவர்களைத் தாக்கியதாகவும், பொருள்களுக்கு பலத்தசேதம் விளைவித்ததாகவும் கூறப்பட்டது. வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

உரிமையைப்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதி மன்றம், சர்க்காருக்கு எதிராக தீர்ப்பளித்து இருக்கிறது.

இதுபோலவே, அச்சட்டத்தின் 3-வது பிரிவும், அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு உலை வைப்பதாக இருக்கிறது என்று நீதி மன்றத் தீர்ப்புகள் கிடைத்துள்ளன. எனவே, நீதி மன்றங்களுக்கு எல்லை கட்டவும், மக்களின் எழுத்துரிமைகளைப் பறிக்கவும், ஏற்கனவே இயற்றியுள்ள சட்டத்திற்கு மேலும் கடுமையான ஏற்பாடுகளைச் செய்ய இந்திய சர்க்கார் முனைந்திருக்கிறது.

கானடாவிலிருந்து 9,825 டன் கோதுமை

சென்னை, அக் 23—

எஸ். எஸ். எம்போரியன் என்ற கப்பல், 9,825 டன் கனடிய கோதுமையுடன 22-ம் தேதி கொச்சித் துறைமுகம் வந்து சேர்ந்தது இந்தக் கோதுமையில் 4,000 டன் திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள கோதுமை முழுதும் கொச்சியிலுள்ள மத்திய சேமிப்புக் கிடங்கில் சேமித்து வைக்கப்படும்.

தீப்பெட்டித் தொழில்

86,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும்

பம்பாய், அக். 24—

தீப்பெட்டித் தொழிலில், நெருப்புப் பெட்டியின் விலையை ஏற்றுமலேயே, 86,000 பேர்களுக்கு வேலை கிடைக்கச் செய்யலாம் என்று அகில இந்திய கதர் கைத்தொழில் போர்டு பொது உற்பத்தி திட்டக் கமிட்டி பொரிசு செய்துள்ளது.

ஒரு மாதத்தில், இந்தியாவிற்கு சராசரி 36,00,00,000 தீப்பெட்டிகள் தேவையாக இருக்கின்றன.

1950 மார்ச் வரையில், இந்தியாவில், 232 தீப்பெட்டித் தொழிற்சாலைகள், நெருப்புப் பெட்டிகளைத் தயார் செய்து வந்தன.

போட்டி காரணமாக, சென்ற மூன்று ஆண்டுகளில், 89 நெருப்புப் பெட்டி தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன; இதனுல், 1,00,000 பேர் வேலை இழக்க நேரிட்டது.

பாக்கியுள்ள 143 தொழிற்சாலைகளில், 8 'ஏ' வகுப்புத் தொழிற்சாலைகள்; இவைகளில், நவீன இயந்திர சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பிச்சைக்காரர் தகராறு

சென்னை அரசியலாரின் புதிய திட்டம்

சென்னை, அக். 23—

சென்னை நகரில், பிச்சைக்காரர் தகராறை நீக்க சர்க்கார் தயாரித்து வரும் திட்டம் நிறைவேறியவுடன், தெருக்களில் பிச்சைக்காரர்களையே காண முடியாதென சொல்லப்படுகிறது.

தற்போது, நகரில், பத்தாயிரம் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்களாம். இவர்களுக்கு ஒரு பகுதியினருக்காவது உடனடியான நிவாரணம் தேவையெனக் கருதி அதற்கான முகாம்களை ஆவடியிலும், பொம்பூரிலும் அமைக்க ஏற்பாடாகி வருகிறது.

ஏஜண்டுகள் தேவை

"நம் நாடு" விற்பனை செய்ய கீழ்க்கண்ட ஊர்களில் முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை விபரங்கட்கு எழுதவும்.

ஆம்பூர்
பாபநாசம்
புவனகிரி
பேராவூரணி
கோள்ளிடம்
மங்கலம்பூர்
பெரியகுளம்
குமாரபாளையம்
பவானி
ஸ்ரீவைகுண்டம்
மானாமதுரை
சங்கரநயினார்கோவில்
சத்தியமங்கலம்
திருப்பத்தூர் (R. D.)
தனுஷ்கோடி
தாராபுரம்
ஜோலார்பேட்டை

பொறுப்பாளர்,
"நம் நாடு"

தூத்துக்குடி வழக்கு நிதி

★

முன் தொடர்ச்சி ரூபாய்	1068-12—4
சென்னை கிஷ்டன்	1—0—0
,, கந்தசாமி	2—0—0
,, ரங்கசாமி	1—0—0
இலங்கை எஸ். ஆர். ராஜாமணி	2—0—0
காதக்கோட்டை தி. மு. கழகம்	1—8—0
தஞ்சை மாவட்டக் கைத்தொழிற்பள்ளி மாணவர்கள் சார்பில் பி. நாகராசன் மூலம்	4-11—0
லால்குடி கல்லூரி மாணவர்கள்	3 -0—0
ஆத்தூக்குடி பி. குருசாமி, ஆசீர்வாதம், பெருமாள், தட்சணாமூர்த்தி, குமார், பொன்னுசாமி, வீரசங்கிலி, மாரிமுத்து, பெரியசாமி, அந்தோணிமுத்து, அன்னத்தாய், அனந்தம்மாள், பிரமசக்தியம்மாள், பிச்சையம்மாள், பி.குருவம்மாள், சாமலட்சுமி, மாடத்தியம்மாள், சீதாலட்சுமி, பெரியபிராட்டி, குருவம்மாள், அரசமரத்தம்மாள், மூக்கையா, அருணாசலம், பாண்டியா ஆகியோர்கள் வரவு	7-14—0
ராசபாளையம் ஆ. மீனாட்சிசுந்தரம்	1—0—0
,, மீ. சொர்ணம்மாள்	1—0—0
,, ஆ. எலிசபெத்	1—0—0
,, ஆ. ராஜசேகரன்	1—0—0
,, ஆ. தமிழ்க்கலை	1—0—0
,, வ. பெ. கருப்பையா	3—0—0
,, ச. கணேசன்	2—0—0
ஆத்தூக்குடி காளமுத்து - நடராசன் படிப்பகம்	2—0—0
கள்ளக்குறிச்சி தி. மு. கழகம்	2—0—0
பம்பாய், அக்ரி - கோல்செக்ரி தி. மு. கழகத் தோழர்கள்	15—2—0
ஈரோடு ஆதி. சு. கருப்பையா	10—0—0
குன்றத்தூர் (பூந்தமல்லி) தி. மு. கழகப் பொதுக்கூட்ட உண்டியல் வசூல்	5—0—0
தண்டராம்பட்டு மு. அ. ராமசாமி	1—0—0
,, அ. கோபால்	1—0—0
,, இரா. மணி	1—0—0
,, என். பழனி	1—0—0
,, அ.பழனி, சத்தியவேல், வ. அருணாசலம் முதலியோர்	1—8—0
விளாப்பாக்கம் ஆர். பி. சிங்கப்பன்	5—0—0
சென்னை-1. பி. வீரராகவன்	10—0—0
மேலானி தி. மு. கழகம், மே. அ. இராசு	1—0—0
வேலூர் கா. கா. சபாபதி	2—0—0
கட்டிமேடு - ஆதிரங்கம் தி மு கழகம்	5—0—0
அரக்கோணம் தி மு. கழகம், என். கோவிந்தராசன்	5—0—0
ஆத்தூக்குடி வி. பி. என். எஸ். ராசன்	1—0—0
,, வி. பி. எல். எம். பாண்டி	1—0—0
,, வி. பி. என். எம். எம். பாண்டி	1—0—0
,, வி. பி. என். மாரியப்பன்	1—0—0
,, மா. சுட்லையா	3—0—0
,, வி. பி. என். கே. ராசன்	1—0—0
,, சா. பழனிச்சாமி	3—0—0
,, சா. குருசாமி	2—0—0
,, ந. ரத்தினம்	2—0—0
,, பெ. துலாராசு	1—0—0
,, பெ. பொன்னுசாமி	1—0—0
,, எம். சுந்தரம்	1—0—0
,, கூடப்பன்	1—0—0
,, பி. பாண்டி	1—0—0
,, டி. [illegible]	1—0—0
சிதம்பரம் கே. பி. சபாபதி	1—0—0
,, என். [illegible]	1—0—0
,, பி. [illegible]	1—0—0
,, என். நாசன்	1—0—0
,, டி. டி. [illegible] ஜெயசிங்	1—0—0
,, ஜி. [illegible]	1—0—0
,, கே. [illegible]	1—0—0
,, பி. வெங்கடராமன்	1—0—0
,, டி. [illegible]	1—0—0
,, எஸ். வெங்கடாசலம்	1—0—0
சூலூர் தி. மு. கழக பொதுக்கூட்ட உண்டி வசூல்	3—0—0
,, என். என். தம்பு. சாமி	2—0—0
,, ஆர். எஸ். [illegible]	2—0—0
,, பழனியப்பன், சுப்ரமணியம், செல்லப்பன், ராமசாமி, [illegible], அருணாசலம், எஸ். பி. ரங்கசாமி, கருப்பண்ணன், மருதாசலம், சண்முகசுந்தரம், [illegible], எஸ். ஏ. அருணாசலம் ஆகியோர்	6—0—0
,, எஸ். ஏ. கந்தசாமி	1—0—0
,, என். கே. சீனிவாசன்	1—0—0
ஆத்தூக்குடி பொன் கடலை வயப்புத் தொழிலாளிகள்:—	
,, ஆ. பிச்சையா	1—0—0
,, சா. [illegible]	1—0—0
,, கே. [illegible]	1—0—0
,, ஆர். [illegible]	1—0—0
,, ஏ. தர்மராசன்	1—0—0
,, வி. ராமசாமி, பால்சாமி, ஆறுமுகசாமி, துரைப்பாண்டியன், விஜயன், தங்கப் பாண்டி, குருசாமி, செல்லதுரை, [illegible], [illegible] ஆகியோர்	5—0—0
தோழர் ஏ. [illegible] மூலம்: 10-ந் தேதி [illegible] வெளியிடப்பட்ட நிதிக் கணக்கில், [illegible] உண்டியல் வசூல் [illegible] முருகன் [illegible] தி. மு. கழகப் பொதுக்கூட்ட உண்டியல் வசூல்	1—0—8
	2? .0—0

(தொடர்ச்சி அடுத்த பத்தி பார்க்கவும்)

கழகக் கூட்டம்

✶

சேலம் :

அம்மாபேட்டை கெ. 2, மார்க்கெட்தெரு,மாலை 6 மணி

தலைவர் : பி. எம். கோபால்

பேச்சாளர்கள் :

ஈரோடு எஸ். அப்பாவு
சிற்றுளி - ஏ. சுப்ரமணியம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
எஸ். ஏ. அன்புக்கரசு
கே. ஏ. நடராசன்
கே. ஏ. வெங்கடாசலம்

(தேதி நமக்கும் தெரியாது — ஆசிரியர்)

சென்னை மாவட்டப் பொதுவுடைமைக் கட்சி மாநாடு

சென்னை, அக். 24—

சென்னை மாவட்ட பொதுவுடைமைக் கட்சியின் மாநாடு, அக். 25-ந் தேதி மாலை, சென்னை மெமோரியல் ஹாலில் நடைபெறும். அன்று பிற்பகல் 3-மணிக்கு பிராட்வேயிலுள்ள கட்சிக் காரியாலயத்திலிருந்து ஊர்வலம் ஒன்று புறப்பட்டு மாநாட்டுப் பந்தலை அடையும். வரவேற்பு, சொற்பொழிவு, கலாசார நிகழ்ச்சி முதலியன மாநாட்டின் முக்கிய அங்கங்கள்.

✫

பாரதி நாடக மன்றம்

சென்னை, அக் 24—

25—10—53 ஞாயிறு மாலை 3 மணிக்கு, மவுண்ட்ரோடு, மகாஜன ஹாலில், மன்றத் திறப்பு விழா நடைபெறும். மன்றத்தை, பி. ஆர். கோகுல கிருஷ்ணன், பி. ஏ. பி. எல்., தலைமையில், பி. பாலசுப்ரமணியம் ('சண்டே அப்சர்வர்') அவர்கள் திறந்து வைப்பார். 'பாரததேவி' துணை ஆசிரியர் டி. ச. கோபன் பாரதி படத்தைத் திறந்துவைப்பார். நடிப்புத் திலகம் எஸ். எஸ். ராஜேந்திரன்; நடிகமணி டி. வி. நாராயணசாமி, வி. பி. எஸ். மணியம் ஆகியோர் பேசுவர். சாமுவேல் சக்ரவர்த்தி இன்னிசை வழங்குவார். முடிவில் 'இரத்தின மாலை' என்ற நாடகத்தின் ஒரு காட்சி நடித்துக் காட்டப்படும்.

இஸ்ரேலுக்கு எச்சரிக்கை

அம்மான், அக். 22—

இஸ்ரேல், இனிமேல், ஜோர்தான் எல்லைப்புறத்தில் பலாத்காரத்தில் இறங்கினால், பதிலுக்குப் பதில் தாக்கப்படும் என்று ஜோர்தான் பிரதமர் கூறியுள்ளார்.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

104-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

✶

இன்று

103-வது நாள்

பர்மாவில் கொமிங்டாங் துருப்புகளுக்கு 'கல்தா'!

பாங்காக், அக். 21—

நவம்பர் 15-ந் தேதி முதல், பர்மாவிலுள்ள தேசிய சீனாவின் கொமிங்டாங் துருப்புகள், 100 பேர் வீதம் வெளியேற்றப்படுவார்கள்.

மற்றும், 2000 துருப்புகளும், விரைவில் வெளியேற்றப்படுவர். அண்மையில் பாங்காக்கில் கையெழுத்தான மூவரசு ஒப்பந்தத்தின் இம்முடிவு இன்று வெளியாயிற்று. கம்யூனிஸ்டுகள் சீனத் துருப்புகளுடன் கலப்பதையும், தாய்லாந்து துருப்புகளுடன் சீனத் துருப்புகள் சேர்ந்திருப்பதை அறியவும், இம்முறை கையாளப்படவிருக்கிறது.

வெளியேற்றத் திட்டத்தை பார்மோசா சர்க்கார் ஏற்றுக் கொண்டுள்ளது.

திருமணங்கள்

26—10—53 திங்கட்கிழமையன்று, நாகல்பாவி தோழர் கெ. பெரியசாமி அவர்களின் செல்வி நீலவேணியை, தோழர் வெ. ராமசாமி ('நவ இந்தியா' துணை ஆசிரியர்) புலவர் மா. நன்னன் அவர்கள் தலைமையில் துணைவியாக ஏற்கும் மண விழா, பழனியில், தோழர் வி. வி. சி. ஆர். முருகேசனார் அவர்கள் கட்டிடத்தில், காலை 9-மணிக்கு மேல் நடைபெறும்.

* * *

சென்னை 'மெயில்' பத்திரிகை விற்பனையாளர் டி. மணவாளனார் அவர்களின் மகள் தோழியர் கமலவேணிக்கும், தோழர் சி எஸ். சுந்தருக்கும், மகன் தோழர் டி. எம். சந்திரசேகரனுக்கும், தோழியர் சங்கரிக்கும் அக். 26-ந் தேதி திங்களன்று காலை 4 மணிக்குமேல் 10-30 மணிக்குள் சென்னை பலளக்காரத் தெரு, 33 எண் வீட்டில், திருமணங்கள் நடைபெறும். அன்று மாலை 6-மணிக்கு, செயிண்ட் மேரிஸ் ஹாலில், குமாரிகள் கே. எஸ். ராசம், கே. எஸ். சந்திரா ஆகியோரின் நாட்டியம் நடைபெறும்.

(முன் பத்தியின் தொடர்ச்சி)

புதுச்சேரி அஞ்சலையம்மாள்	1—8—0
,, பி. கே டி. நாயகம்	1—8—0
,, பி. ஆனந்தன்	1—8—0
,, முத்துசாமி	1—8—0
நெல்லிக்குப்பம் தி. மு. கழக உண்டியல் வசூல்	7-12—9
பண்ருட்டி தி. மு. கழகம்	2—0—0
,, கிருஷ்ணராஜ்	1—0—0
மதுரை ஏ. சங்கையா	1—0—0
தஞ்சை அய்யம்பேட்டை தி. மு. கழக அனுதாபிகள் தோழர் டி. ராஜூ மூலம்	7—0—0
பொன்மலை மே.க. கோட்டை டி. ஆர். கோவிந்தராசன்	1—0—0
,, ஏ. ஞானதிக்கம்	1—0—0
தஞ்சை ஆர். வேம்பையன்	1—0—0
வாணவாசி ப. சண்முகம்	2—0—0
உதகை கு. நடராசு	1—0—0
ஆக மொத்தம் ரூபாய்	1281—4—4

குறிப்பு: 2—10—53-ந் தேதிய 'நம் நாடு' இதழில் 3-ம் பக்கம் வெளியாகியுள்ள தூத்துக்குடி வழக்கு நிதிக் கணக்கில், "விருதுநகர்டி. ஏ. ஏகநாதன் 6—0—0" என்றிருப்பதை, "விருதுநகர் வி. வி. ஆர். படிப்பகம் 6—0—0" என்று திருத்திப் படித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

"எவரெஸ்ட் வெற்றி" சினிமாப் படம்

அரச தம்பதிகள் கண்டு களித்தனர்

லண்டன், அக். 24—

"எவரெஸ்ட் வெற்றி" சினிமாப் படத்தின் முதல் காட்சியை, லண்டன் தியேட்டர் ஒன்றில் காட்டப்பட்டபோது, அரச தம்பதிகள் உட்பட சுமார் 1,200 பேர்கள் நேற்றிரவு பார்த்தனர்.

அரச தம்பதிகளுக்குப் பின்னால், எவரெஸ்ட் ஏறிய கோஷ்டித் தலைவர் சர் ஜான் ஹண்ட், சர் எட்மண்ட் ஹில்லாரி, போர்டில்லான், எவரெஸ்ட் படம் பிடித்த டாம் ஸ்டோபார்ட் ஆகியோர் உட்கார்ந்திருந்தனர்.

சுமார் 80 நிமிஷ நேரம் ஓடும் இக்காட்சி முடிந்ததும் எவரெஸ்ட் கோஷ்டியார் மேடையில் தோன்றினர்; ஆனால், இக் கோஷ்டியில் டென்சிங் இல்லாமலிருந்தது எல்லோருக்கும் வருத்தத்தை அளித்தது.

டென்சிங், எவரெஸ்ட் உச்சிமீது, இந்திய, நேப்பாள, பிரிட்டிஷ் கொடிகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்ததை, ஹில்லாரி போட்டோ எடுத்ததைத் தனியாகப் பட ஆரம்பத்திலேயே காட்டப்படுகிறது.

ஒவ்வொரு காட்சியிலும் மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள் நிறைந்திருக்கின்றன. எவரெஸ்ட் உச்சியை, விமானத்திலிருந்து, இந்திய விமானப் படையினர் படம் எடுத்ததை, கடைசி காட்சியாக சேர்த்திருக்கின்றனர்.

* * *

மலையேறுவதில் போட்டி

பெர்லின், அக். 24—

யு. எஸ்., இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் மலையேறும் கோஷ்டிகள், அடுத்த ஆண்டில் பாகிஸ்தானில் உள்ள உலகத்தின் இரண்டாவது சிகரமான 'காட்வின் ஆஸ்டின்' அல்லது 'கே-ஏ' என்ற சிகரத்தில் ஏற போட்டி போடுகின்றனர்.

இவ்வாண்டு, யு. எஸ். குழு வொன்று, சிகரத்தை அடைய செய்த முயற்சி, தோல்வியடைந்தது. இக் குழு; அடுத்த ஆண்டிலும் முயற்சி செய்யும்.

இக் குழுவினர், பாகிஸ்தான் சர்க்காரின் அனுமதியைக் கோரியுள்ளனர்.

'அலாதியான டெக்னிக்'

பம்பாய், அக். 22—

"இப்போது தயாரிக்கப்பட்டுள்ள இந்தியப் படங்கள், ஹாலிவுட் படங்களுக்கு நிகராக உள்ளது: ஹாலிவுட் படத்தயாரிப்பில், ஒரு அலாதியான 'டெக்னிக்' கையாளப்படுகிறது; அயல் நாட்டு மார்க்கெட்டுகளின் தன்மை அறிந்து, அவைகளுக்கேற்ப படங்கள் தயாரிப்பதில், அவர்கள் மிகவும் வல்லவர்கள்," என்று, இந்தியாவில் பிறந்து, அமெரிக்காவில், நடிகராகப் புகழ் பெற்ற இந்தியர் ஸாபூ கூறியுள்ளார்.

பிறப்பு

அயன்புரம், அக். 23—

அயன்புரம் தி. மு. கழக கிளையின் செயற்குழு அங்கத்தினர் தோழர் பெருமாள் அவர்களின் துணைவியார் செந்தாமரை அம்மாள், 10—10—53ல், ஓர் பெண் மகவுக்குத் தாயானார். தாயும், சேயும் நலம். அதன் நினைவாக, 'நம் நாடு' இதழின் வளர்ச்சிக்கு ரூபாய் 5 அன்பளிக்கப்பட்டது. இந்த ரூ 5-ம் வரப்பெற்றோம்—நன்றியுடையது -பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.